**R 5839 (page 28)**

# மனிதனுக்கு கீழ்ப்படியாமல் தேவனுக்கு கீழ்ப்படிதல்

## OBEYING GOD RATHER THAN MEN

ஆதார வசனங்கள் : அப்போஸ்தலர் 4:1-31.
தேவனுடைய ஊழியக்காரர்களின் வைராக்கியம்......ஆலோசனை சங்கத்தார் முன்பு பரிசுத்த பேதுருவின் சொற்பொழிவு ...... அந்த விவேகிகள் அடைந்த பிரமிப்பு. படிப்பறியாதவர்களும், பேதமையுள்ளவர்களுமாயிருந்த அப்போஸ்தலர்கள்....பயத்தின் ஆவியில் அல்ல, மாறாக தெளிந்த புத்தியும் பலமும் உற்சாகமுமுள்ள ஆவியிலுமிருந்தனர். இயேசுவின் பள்ளீக்கூடத்தில் கற்பிக்கப்பட்டவர்கள்.....ஆச்சரியமான விளைவுகள்....எப்பொழுது கீழ்ப்படியக் கூடாது.

திறவுகோல் வாக்கியம் : "விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன்கொள்ளுங்கள்."...... 1கொரிந்தியர் 16:13.

பரிசுத்த பேதுருவும் யோவானும் தேவாலயத்திலிருந்து சப்பாணியான மனுஷனை சொஸ்தமாக்கினவர் இயேசு என்று பிரசங்கித்ததால், கைது செய்யப்பட்டு, கற்றறிந்து எழுபது யூதர்களடங்கி உள்ளடக்கிய ஆலோசனை சங்கமான யூதர்களின் தலைமை நீதிமன்றத்திற்கு முன்பாக பதிலளிக்கும்படி கொண்டுவரப்பட்டனர். அவர்கள் சிறைப்பிடிக்கப் பட்டவர்களை தங்களுக்கு முன்பாக நிறுத்தி, அவர்களைச் சுற்றி அமர்ந்திருந்தனர். அப்போஸ்தலர்கள் படிப்பறிவில்லாத மீனவர்கள் என்றும், பொது இடங்களில் பேசுவதற்கும், பெரியோரும் கல்விமான்களுமானவர்களிடத்தில் தொடர்பு கொள்வதில் பழக்கமற்றவர்கள் என்றும் நாம் நினைவு கூறும்போது, அங்கு பரிசுத்தவானாகிய பேதுரு சுவிசேஷத்தை ஒளிவு மறைவு இல்லாமல் முன்வைத்ததில், அவர்களின் தைரியம் குறித்த நாம் பிரமிப்படையலாம். இது ஆலோசனை சங்கத்தாரையும் கூட ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இயேசுவை குறித்து பிரசங்கித்ததாலே அவர்கள் அப்போஸ்தலர்களை கண்டனம் செய்ய விரும்பினார்களே ஒழிய, சப்பாணியான மனுஷனை சொஸ்தமாக்கின நற்கிரியைக்காக அல்ல.

எனினும், பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலினால் ஏவப்பட்ட பரிசுத்தவானாகிய பேதுரு, உண்மையில் நோயாளியை சொஸ்தப்படுத்தினதினிமித்தமே அவர்கள் பரீட்சிகப்படுகின்றனர் என்ற உண்மைக்கு அவர்களுடைய கவனத்தை ஞானத்துடனும், நேர்த்தியுடனும் கொண்டுவந்தார். மறுபடியும், தன்னாலும் தன்னோடு இருந்தவர்களின் எந்த வல்லமையினாலும் அல்ல என்று மறுக்கின்றார். தாங்கள் வெறுமனே சாதாரண மனுஷர்கள் என்று ஒப்புக்கொண்டு, அற்புதத்திற்கான முழு கனத்தை இயேசுவுக்கே உரியதாக்கினார். கர்த்தரின் ஸ்தானாபதிகளாய் இருந்து அவரை பிரதிபலிப்பவர்களுக்கு இங்கு எத்தகைய பாடம் உள்ளது! பரிசுத்தவானாகிய பவுல் கூறினது போல, "நாங்கள் எங்களையே பிரசங்கியாமல்; கிறிஸ்து இயேசுவையே பிரசங்கிக்கிறோம்." 2கொரிந்தியர் 4:5.

எந்த சூழ்நிலைகளிலும், "உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், இஸ்ரயேல் ஜனங்களெல்லாருக்கும் தெரிந்திருக்கக்கடவது" என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகள் உண்மையிலேயே தைரியம் நிறைந்ததாகவே இருந்தது. இயேசு வஞ்சகர் அல்ல, மாறாக நீண்டகாலமாக யூதர்கள் எதிர்பார்த்திருந்த உண்மையான மேசியா அவரே என்று மாத்திரம் பரிசுத்த பேதுரு பிரசங்கியாமல், ஆலோசனை சங்கத்தாரே மேசியாவை

மேசியாவை கொலை செய்தார்கள் என்றும் அறிவித்தார். அதுவே உண்மையாய் இருந்தது, அந்த உண்மையை அறிவிப்பது அவசியமாகவும் இருந்தது. இந்த உண்மையை மறைத்திருந்தால், அது பயத்தைக் காட்டியிருக்கும். மேலும் ஆலோசனை சங்கத்தினருக்கும், கேட்பவர்களுக்கும் சரியான, அதே சமயம் நேர்த்தியான தாக்கத்தை அப்போஸ்தலரால் ஏற்படுத்தியிருக்க முடியாது.

சிலர், பரிசுத்த பேதுரு பெருந்தன்மையான்வருக்குரிய நடையில் பேசவில்லை - அதாவது, சொந்த நடையில் ஆலோசனை சங்கத்தினரிடம் பேசியிருக்கக்கூடாது என கூறலாம். வட அமெரிக்க ஆய்வறிக்கையில், திரு.பென்சன் அவர்கள், பெருந்தன்மையாளர் அல்லது சாந்தகுணமுள்ளவர் என்ற வார்த்தைக்கு கொடுக்கும் அர்த்தம் இந்த நிகழ்வுக்குப் பொருந்துவதாகத் தெரிகிறது. அந்த அர்த்தமாவது:

"சாந்தகுணமுள்ளவன் என்று ஒருவனை எவ்வாறு வரையறை செய்வீர்கள்?" என்று ஒரு உரையாடுதலின் குறிப்பிட்ட கட்டத்தில் வழக்கறிஞர் கேட்டார். எவன் ஒருவன் உள்நோக்கமில்லாமல் ஒரு போதும் தாக்கிப் பேசமாட்டானோ அவனே சாந்தகுணமுள்ளவன் என்று பாதிரியார் கூறினார். அங்கு இருந்தவர்களில் இருவர் தவறு நடந்து விட்டதாக உணர்ந்து அதை திருத்தும் விதமாக, உள்நோக்கத்துடன் கூறுவதாக முணுமுணுத்தனர். ஆனால் பாதிரியாரோ புன்சிரிப்புடன், இல்லை என்று கூறி, சாந்தகுணமுள்ளவன் கனமும், நியாயமான காரணமும் அவசியப்படுத்தும் தருணங்களில் தாக்கும் விதத்தில் பேசவே செய்வான் என்றார். சாந்தகுணமில்லாதவனோ, நியாயமான காரணம் இல்லாமலேயே எப்போதும் தாக்கிப்பேசுகிறவனாய் இருப்பான். ஆனால் உள்நோக்கத்துடன் தாக்கிப்பேசுகையில் அவன் சாந்தகுணமுள்ளவனாக இருப்பானா? என்று நீதிபதி கேட்டார். 'சாந்தகுணமுள்ளவன் அப்படியே இருப்பான்' என்று புன்முறுவல் காண்பித்தார் பாதிரியார்."

பரிசுத்த பேதுருவின் விஷயத்தில் அது மழுப்பிப் பேசுவதற்கான நேரம் இல்லை. அது தன் கடமையை நிறைவேற்றுவதையே முழுமூச்சாகக்கொண்ட ஒரு தயாளகுணமுள்ள மனுஷன் தனக்கு கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி, இரக்கமற்ற முறைமையை கையாடாமல் கேட்பவர்களுக்கு சத்தியத்தை முன் வைப்பதற்கான நேரமாகும். இங்கு குறிப்பிட்டிருக்கிறபடி பரிசுத்தவானாகிய பேதுரு நிறைய காரியங்களை ஒரு சில வார்த்தைகளுக்குள் அடக்கியிருப்பது ஆச்சரியமளிக்கிறது! அவர் சிலுவையில் அறையப்பட்ட நசரேயனாகிய இயேசுவே மேசியா என்றும், அவரே தேவனால் அங்கீகரிக்கப்பட்டவர் என்றும் அவரை மரித்தோரிலிருந்து உயிர்த்தெழச் செய்ததின் மூலம் வெளியரங்கமாக்கியதன் மூலம் அடையாளப்படுத்தினார்.

## கதிகலங்கிய ஆலோசனை சங்கத்தார்

அடுத்ததாக பரிசுத்தவானாகிய பேதுரு அவர்களுக்கு தாவீதின் தீர்க்கதரிசனங்களிலிருந்து (சங்கீதம் 118:22), மேற்கோளிட்டு கூறுகையில், "வீடுகட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" என்று கூறினார். அவர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு, அந்த் வார்த்தைகளில் கடுமையும், உணர்த்துதலும் இருந்திருக்குமேயானால், அதற்கு காரணம் அவர்கள் மிக தவறான நிலைப்பாட்டில் இருந்ததே ஆகும். பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்தவானாகிய பேதுருவின் வார்த்தைகளைக் கேட்டவர்கள் இருந்தது போல இவர்களும் தாழ்மையுள்ள இருதயம் கொண்டவர்களாக இருந்திருந்தால், அது இவர்களுக்கு எவ்வளவு பாக்கியமாய் இருந்திருக்கும்! அப்படியிருந்தால் இவர்களும் அச்சம் கொண்டு, "புருஷர்களே, சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டிருப்பார்கள். ஆனால் அந்தோ! கல்வியறிவு, மனுஷரிடத்தில் கனம், மேன்மைஸ்தானம் ஆகிய இவைகளைப் பெற்றிருப்பவர்களை எப்போதும் நிர்பாக்கியத்தில் தள்ளுகின்றது.

ஆலோசனை சங்கத்தார் பொருளாதார ரீதியாகவும், அறிவுப்பூர்வமாகவும், மனுஷர்

கனத்திலும், மாத்திரம் இல்லாமல், கல்வியறிவிலும் ஐசுவரியவான்களாக இருந்தார்கள். "ஐசுவரியவான்களாகிய உங்களுக்கு ஐயோ!"....நீங்கள் சாதகமற்ற நிலையில் உள்ளீர்கள் என்ற இயேசுவின் வார்த்தைகள் என்ற இயேசுவின் வார்த்தைகள் இவர்களுக்கு கடுமையானதாய் உள்ளது. இப்படிப்பட்டவர்களில் அநேகருக்கு சுவிசேஷத்தைப் பற்றின எளிமையான செய்தியை ஏற்றுக்கொள்ளும் விஷயத்தில் பெருமை, மனுஷர் மத்தியில் கனம், தற்பெருமை போன்றவை இடையூராய் உள்ளது. இப்படியாக தெய்வீக ஏற்பாட்டில் நஷ்டத்துக்கு சரிக்கட்டுதல் இருப்பதாக

**R5840 : page 28**

உணர்கிறோம். மேலும் ஒரு வகையில் ஏழ்மை என்பது வேஷந்தரித்த ஆசீர்வாதமாக உள்ளது. எனவேதான், பரலோக இராஜ்யத்தில், மணவாட்டி வகுப்பில், இடத்தைப் பெறுபவர்களில் அல்லது கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களில் அநேகர் பிரபுக்கள் இல்லை, அநேகர் கல்விமான்கள் இல்லை, அநேகர் பெரியவர்கள் இல்லை, அநேகர் ஐசுவரியவான்கள் இல்லை என்று தேவனுடைய வார்த்தை உறுதியளிக்கிறது. ..... 1கொரிந்தியர் 1:26-29.

பரிசுத்த பவுலும், பரிசுத்த யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு, அவர்கள் படிப்பறியாதவர்களென்றும், பேதைமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால், ஆலோசனை சங்கத்தார் ஆச்சரியப்பட்டு, "ஆவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்களென்று அறிந்து கொண்டார்கள்." ஆம் உண்மைதான்! இயேசுவை குறித்தும் கூட, "நம்முடைய எந்த பள்ளிகளிலும் .........இவர் கல்லாதவராயிருந்தும்.......நம்முடைய பள்ளிகளின்.....வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார்?" என்று சிலர் கூறியிருந்தனர். (யோவான் 7:15). கர்த்தருடைய ஆவியின் வல்லமையின் மூலமாய் ஜனங்கள் மத்தியில் அவருக்கு இருந்த வல்லமையையும், ஒளிவு மறைவின்றி சத்தியத்தை அவர் முன்வைப்பதையும் அவர்கள் அறிந்திருந்தனர். இந்த மனிதர்களும் அதே விதமாய் இயேசுவின் ஆவியினால் நிரப்பப்பட்டிருந்ததை அவர்கள் அடையாளம் கண்டனர். மேலும், இந்நாள் வரையிலும் இது இயேசுவின் பின்னடியார்கள் விஷயத்தில் உண்மையாய் இருக்கின்றது. அப்போஸ்தலர் எழுதியிருக்கிறபடி, "தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்" (2 தீமோத்தேயு 1:7). கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் இந்த கருத்தை

**R5840 : page 29**

நினைவில் கொண்டு, இத்தகைய ஆவியை அபிவிருத்தி செய்து, கர்த்தர் இயேசு மற்றும் உண்மையுள்ள அப்போஸ்தலர்களின் பிரதிநிதிகளாக இருக்கும்போது, இவர்கள் இயேசுவுடன் கூட இருந்தவர்கள் என்றும், அவரால் கற்பிக்கப்பட்டவர் என்றும், அனைத்து ஜனங்களும் அறிந்து கொள்வர்.

ஆனால் தேவனுடனான உறவிற்குள் வர கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே ஒரே வழி என்பதை ஒருவரும் மறக்க வேண்டாம். அப்போஸ்தலர் இந்த பாடத்தில் சுட்டிக்காட்டுவதுபோல, "வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப் படவில்லை." நாம் இயேசுவினிடத்தில் விசுவாசம் உடையோராக இருக்கவேண்டும். அவர் உலகத்தின் பாவத்திற்காக மரித்தார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தனிப்பட்ட வகையில் நாம் அவரை நம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டும். அவருடைய அடிச்சுவட்டில் உண்மையாய் பின்தொடர்ந்து செல்ல, நம்மிடத்தில் கொஞ்சமாக உள்ள அனைத்தையும் மரண பரியந்தம் நாம் அர்ப்பணிக்க வேண்டும். இந்த நிபந்தனைகளின் அடிப்படையில் நாம் அவருடைய சீஷர்களாகி, அவரது பள்ளிக்கூடத்தில் பாடங்களை கற்றுக் கொண்டு, பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப் பட்டவர்களாயிருந்து அவருடைய மகத்துவங்களை அதிகமதிகமாய் வெளிப்படுத்துவதற்கும், மனுஷர்கள் முன்பு நம்முடைய வெளிச்சத்தை பிரகாசிக்கச் செய்யும் சிலாக்கியம் பெற்றிருக்கிறோம். இதன் மூலம் மனுஷர்கள் நம்முடைய நற்கிரியைகளையும், போதகருக்கும், நமக்கும் இருக்கும் ஒப்புமையைக் கண்டு நம் பொருட்டு தேவனை மகிமைப்படுத்தும் விதமாக இருக்கிறோம்.

தேவனுடைய குமாரானாகிய மேசியாவை கொலை செய்தவர்களாக..... ஜனங்களுக்கு

முன்பாக தங்களை உண்மையான குற்றவாளிகளாக குற்றம் சாட்டி, சூழ்நிலையை தங்களுக்கு விரோதமாக மாற்றியதில், சீஷர்கள் பக்கம் அதிக நியாயம் இருந்ததை உணர்ந்த ஆலோசனை சங்கத்தார் திகைத்தனர். சொஸ்தமாக்கப்பட்ட மனுஷனை அவர்கள் கண்ட போது, அது ஒரு பெரிய அற்புதம் என்று உணர்ந்தனர். அவர்களால் ஒன்றும் பேசக்கூடாதிருந்தது. ஆகவே, இந்த விஷயத்தைக் குறித்து தனிப்பட்ட முறையில் தங்களுக்குள்ளே யோசனை பண்ணுவதற்காக, அப்போஸ்தலர்களை தங்கள் நடுவிலிருந்து வெளியே அனுப்பினர். அவர்களால் அற்புதத்தையும் மறுக்க முடியவில்லை, இயேசுவைப் பற்றிய இது மாதிரியான பேச்சும், தாங்கள் அவரை கொலை செய்தவர்கள் என்ற பேச்சும் ஜனங்கள் மத்தியில் பரவும் பட்சத்தில், அது என்ன நிலைமைக்கு கொண்டு செல்லும் என்பதை நினைத்து பயந்தார்கள். சீஷர்கலை இயேசுவின் நாமத்தில் இனிமேல் பிரசங்கிக்கக்கூடாது என்று பயமுறுத்தி, அவர்கள் மீது குற்றம் சாட்டி, அவர்களை அனுப்பிவிடுவதே நலம் எண்ணினார்கள்.

## சுவிசேஷத்தை பிரசங்கிப்பதில் தைரியம்

பின்பு, அப்போஸ்தலர்களது வியக்கத்தக்க வைராக்கியம் வெளிப்பட்டது. அவர்கள் பதில் அளிக்கையில், "தேவனுக்கு செவிகொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்கு செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப்பாருங்கள். நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே என்றார்கள்."

இயேசுவின் பின்னடியார்கள் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டிருக்க வேண்டும் என்று வேதம் வழிகாட்டுகின்றது (ரோமர் 13:1-7; 1பேதுரு 2:13-17) இப்படி ஒவ்வொரு விஷயத்திலும் சட்டங்களுக்குக் கீழ்ப்படிகிறவர்களாய் இருக்க நாடும் போது, இதற்கும் மேலான பிரமாணம் ஒன்று இருப்பதையும், மேலான ஆட்சியாளரும் இருக்கிறார் என்பதையும் கிறிஸ்தவர்கள் உணர்ந்து, தேவன் என்னும் மேலான வல்லமையிலிருந்து எதிர்மாறான எச்சரிப்பு வெளியாக்கப்படாத பட்சத்தில், உலகத்தின் வல்லமைகளுக்கு கீழ்ப்பட்டிருக்க வேண்டும்.

தேவன் இயேசுவின் மூலம் சீஷர்களுக்கு கட்டளையிட்டு, அவர்கள் தேவனுடைய வாயாக இருந்து, இயேசுவின் மரணம், பாவங்களை நீக்குவதற்கு போதுமானதாய் இருக்கிறதென்றும், அடிக்கப்பட்ட அவர் மீண்டும் வந்து, படிப்படியாக அவருடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கப்போகிறார் என்றும், பாவம் மற்றும் மரணத்திலிருந்து உலகத்தை விடுவிப்பதன் மூலம் ஆசீர்வதிக்கப்போகிறார் என்ற சுவிசேஷசெய்தியைப் பிரசங்கிக்க வேண்டுமென்றார். இந்த நற்செய்தியை நம்பி விசுவாசிக்கும் அனைவரையும் இயேசுவின் சீஷர்களாகும்படி தங்களோடு சேர்த்துக்கொண்டு, இன்னும் ஸ்தாபிக்கப்படாத அந்த ராஜ்யத்தின் அதிபதிக்கு உண்மையும் உத்தமமானவர்களுமாய் விளங்கச்செய்யவேண்டும். இத்தகைய உண்மையின் மூலம், அவர்கள் தங்களுக்குள் இருக்கும் விசுவாசத்தையும் தேவனிடத்தில் தங்களுக்குள் இருக்கும் விசுவாசத்தையும் தேவனிடத்தில் தங்களுக்கு இருந்த கடமை தவறாமையையும் வெளிப்படுத்துவார்கள். மேலும் இதினிமித்தம், அவர்கள் மேசியா ஸ்தாபிக்கப்போகிற இராஜ்யத்தில், அவரோடு ஒரு பங்கையும் பெற்றுக்கொள்வர் என்ற வாக்குத்தத்தத்தைப் பெற்றிருக்கின்றனர்.

ஆகையால் மனுஷன் என்னசெய்வான் என்ற அச்சம் கொள்ளாமல், கேட்கிற செவிகள் எங்கெல்லாம் இருக்கின்றதோ, அங்கெல்லாம் சுவிசேஷசெய்தியை அறிவிப்பது அப்போஸ்தலர்களின் கடமையாய் இருந்தது போல, இயேசுவின் பின்னடியார்கள் அனைவரின் கடமையாகவும் அது இருக்கிறது. அரசாங்கத்தின் சட்டதிட்டங்களுக்கு எதிராகவோ, ஜனநெரிசல் மிகுந்த, போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படும் இடங்களில் கூட்டங்களை நடத்துவதை தவிர்ப்பது நமது கடமை. அப்போஸ்தலர்கள் பொதுக்கூட்டங்களில் பேசும்போது, யூத சட்டங்களுக்கு இடையூறு ஏற்படாதவாறு ஆலயத்தில் தேவசெய்தி அளித்தனர். அவர்களுடைய வைராக்கியம் உண்மையில் நியாயப்பிரமாணத்தினால் அங்கீகாரம் பெற்றதாய் இருந்தது. மேலும், அவர்களை தடை செய்ததில் ஆலோசனை சங்கத்தின் விதிமுறைகளின் வரம்பை மீறினார்கள்.

விசுவாசத்தில் இளையவர்களாய் இருந்த சபையினர், முன்னின்று வழிநடத்தின சீஷர்களை கைது செய்து சிறையில் வைத்தபோது மிகவும் துயரப்பட்டனர் என்பதில் சந்தேகமில்லை. அவர்கள் விடுவிக்கப்பட்ட போது தேவனை ஸ்தோத்திரிப்பதற்காகவும், மகிழ்ந்திருப்பதற்காகவுமான பொதுவான கூடுகை ஏற்பாடு செய்தனர். அதில் அப்போஸ்தலர்களுக்கு அளிக்கப்பட்ட தைரியத்திற்காகவும், அவருடைய வார்த்தைகளிலுள்ள வாக்குத்தத்தங்களுக்காகவும், இவை அனைத்திற்கும் வழிநடத்தின அற்புதத்திற்காகவும் கர்த்தருக்கு நன்றி ஏறெடுக்கப்பட்டது. இதன் விளைவாக அனைவரும் உற்சாகம் ஊட்டப்பட்டவர்களாக, “தேவனுடைய வசனத்தை மிகுந்த தைரியத்துடன் பேசினார்கள்” என்றும், “கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சிகொடுத்தார்கள்; அவர்களெல்லார் மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது” என்றும் நாம் வாசிக்கிறோம்.

இப்பாடத்தோடு முழுவதும் இசைந்திருக்கிற நம்முடைய திறவுகோல் வாக்கியம், எவ்விடத்திலும் காணப்படுகிற தேவனுடைய ஜனங்கள் அனைவரும் தேவனுக்கும், அவருடைய நோக்கங்களுக்கும், உண்மையும், கடமை தவறாமலும் இருக்க வேண்டும் என்ற புத்திமதியை அளிக்கிறதாய் உள்ளது. நம்மில் ஒவ்வொருவரும் நமக்கு இதை பொருத்திப் பார்ப்போம்.

“விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள்,
திடன்கொள்ளுங்கள்.”

---

See more Books & Articles at www.foodfornewcreature.com